DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 236/2024**

**Deposition of LW1 examined as PW1** (Complainant) Dt. 02.02.2026

| | |
|---|---|
| Name | ஸ்ரீதர் |
| Father's/Husband's Name | செல்வம் |
| Village | T. மணல்மேடு |
| Taluk | |
| Age | 33/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 02.06.2026

(Accused absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

சாட்சி மனுவின் பேரில் குறுக்கு விசாரணை செய்தவற்காக மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில்

**குறுக்கு விசாரணை**

நான் எந்த ஊர் என்றால் T.மணல்மேடு ஆகும். எதிரி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அக்காவின் கணவர் ஆவார். எதிரிக்கும் எனது அக்காவிற்கும் நடைபெற்ற திருமணம் என்பது காதல் திருமணமா? அல்லது பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமா? என்றால் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமாகும். 04.09.2023 அன்று சம்பவம் நடந்ததாக யார் என்னிடம் தெரிவித்தது என்றால் எனது அக்கா மகன் நகனேஷ். அலைபேசி வாயிலாக என்னிடம் தெரிவித்தார் என்ன விபரம் தெரிவித்தார் என்றால் நகனேஷ்என்னிடம் அலைபேசியில் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் சண்டை என்றும் அப்பா அம்மாவை அடிப்பதாகவும் என்னிடம் தெரிவித்தார். அப்பா அடித்ததில் அம்மாவிற்கு ரத்தம் வருவதாகவும் என்னிடம் தெரிவித்தார். எனது ஊருக்கும் சம்பவ ஊரான ஆனந்தநல்லூருக்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 20 கிலோமீட்டர் இருக்கும்.நகனேஷ் என்னிடம் தகவல் தெரிவித்த போது நான் திருவிடைக்கழியில் இருந்தேன் அங்கிருந்துதான் ஆனந்தநல்லூருக்கு சென்றேன். எத்தனை மணிக்கு திருவிடைக்கழியில் இருந்து புறப்பட்டேன் என்றால் இரவு சுமார் 8:30 மணி இருக்கும். எத்தனை மணிக்கு ஆனந்தநல்லூர் சென்று சேர்ந்தேன் என்றால் சுமார் 9 மணி இருக்கும் திருவிடை கழிக்கும் ஆனந்தநல்லூருக்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 15, 20 கிலோமீட்டர் இருக்கும். எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் திருமணம் ஆகி விட்டது. அம்மா இருக்கிறார்கள் என்றால் இருக்கிறார்கள். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை

பேர் என்றால் ஒரு அக்கா, ஒரு தங்கை, இரண்டு தம்பிகள். எனது அக்கா ஷீலா என்ன வேலை செய்து வருகிறார் என்றால் முன்பு ஸ்வீட் கடையில் பணியில் இருந்தார் தற்போது வேலைக்கு செல்வதில்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், எனது அக்காவை ஆம்புலன்ஸில் அழைத்து செல்லும்போதுதான் நான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றாலும் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாமல் எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முன்விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

S. [signature]

[signature] 2.2.26